www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

# றோயல் கல்லூரி – கொழும்பு 07
# Royal College – Colombo 07

## முதலாம் தவணைப் பரீட்சை 2021
## First Term Examination 2021

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கிய நயம் | தரம் 11 | நேரம் 3 மணி |
| Tamil Literature | Grade 11 | Time 3 Hours |

**பகுதி I இல் 1, 2 ஆகிய வினாக்களுக்கும் பகுதி II இல் 3ம் வினாவுக்கும் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

**01.**

**(I) தொடக்கம் (V) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.**

(I) **“கலக மேசெயும் கண்இது வாம்என**
**மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்”**

அ. மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கியவன் யார்?
ஆ. மலரம்புகள் ஐந்தும் எவை?

(II) **“இந்தக் கண் கூடத் தெரியாத கெழவியை அல்லா சோதிக்கின்றார்.”**

அ. இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
ஆ. இக் கூற்று இடம்பெற்ற சிறுகதை எது?

(III) **“சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப**
**ஈர்த்தண் டளவந் தகைந்தன”**

அ. இங்கு எடுத்தாளப்பட்டுள்ள உவமையை விளக்குக.
ஆ. இப்பாடலடி எந்நூலில் இடம்பெற்றுள்ளது?

(IV) **“ஆறலை கள்வர் படை விட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை”**

அ. இப்பாடலடி காணப்படும் நூல் எது?
ஆ. இப்பாடலடி மூலம் உணர்த்தப்படுவது யாது?

agaram.lk

(V) **“என்னடி பெண்ணே? என்னை விழுங்கி விடுவது போல் பார்க்கிறாயே என்ன விடயம்…?”**

அ. இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டுள்ளது?
ஆ. இக் கூற்று இடம்பெறும் பகுதி எக் காப்பியத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது?

**(4× 5 = 20 புள்ளிகள்)**

**02. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

உள்ளம் போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம் போய் வேகின்ற மென்றளிர் போல் - பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்.

**அ.** இங்கு யாருடைய நாட்டுச் சிறப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

**ஆ.** இப் பாடலில் காட்டப்படும் உணர்வினை எடுத்துக் காட்டுக.

**இ.** பாடலில் வெளிப்படும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

**ஈ.** பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

**உ.** இப்பாடலைப் பாடிய புலவர் யார்? அந் நூலின் பெயர் யாது?

**(5 × 5 = 25 புள்ளிகள்)**

agaram.lk

## பகுதி II

**03.**

**கீழ்வரும் உரைப்பகுதியினை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பழங்காலத்தில் சமுதாயத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வெவ்வேறாக இருந்தார்கள். இக் காலத்தில் “எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்ற நிலைமை உள்ளது. ஆளப்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. பழங்காலத்தில் இருந்த நிலமைக்கு ஏற்றபடி உரிமை சிலருக்கும் கடமை பலருக்கும் என்று இருந்தன. இக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையும் உண்டு, கடமையும் உண்டு. எதிர்காலத்தில் வேலைக்காரர் என்று ஒரு சாரார் இருக்க மாட்டார்கள். எல்லோரும் ஒவ்வொரு வேலை செய்து உழைத்துப் பழக வேண்டி ஏற்படும். வேலைகளிலும் உயர்ந்த வேலை தாழ்ந்த வேலை என்பது போய் விடும். வியர்வை வராத வேலைக்கு மதிப்பும் வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலை மாறிவிடும். ஆகையால் எந்த உழைப்பிற்கும் பழக்கப்படுத்திக் கொள்வோரே நன்றாக வாழ முடியும். இப்போதே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான நாடுகளில் உடம்பால் உழைப்பவர்கள் நல்ல ஊதியம் பெற்று மூளையால் உழைக்கும் அலுவலர்க்கு நிகராக வாழ்கின்றனர்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

அ. பழங்காலத்தில் சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு இருந்தனர்?

ஆ. இக்காலத்தில் மக்கள் எவ்வாறு இருக்கின்றனர்?

இ. பழங்காலம் , இக்காலம் இரண்டிலும் உரிமை,கடமை பற்றி யாது கூறப்பட்டுள்ளது?

ஈ. எதிர்காலத்தில் எவ்வாறான நிலை ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ளது?

உ.எந்த உழைப்பிற்கும் பழக்கப்படுத்திக் கொள்வோரே நன்றாக வாழ முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டப்படும் விடயம் யாது?

**(5 × 5 = 25 புள்ளிகள்)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**04.** "தெளிவு" என்ற சிறுகதையை மையமாக வைத்து

அ. கதைக்கள விபரிப்பு

ஆ. தபாற்காரனின் வறுமை நிலை

இ. கதைப்பிரதேசத்தில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

**(15புள்ளிகள்)**

**05.**"கானல்வரி" என்ற பாடல் பகுதியை மையமாகக் கொண்டு

அ. காவிரி நதியின் வளம்

ஆ. சோழ மன்னனின் சிறப்புப் பற்றி ஆராய்க.

**(15புள்ளிகள்)**

**06.**நலம் புனைந்து உரைத்தல் என்ற பகுதியில் தலைவியின் மென்மைத்தன்மை,அழகு என்பன எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**07.** "வஞ்சியர் காண்டம்" என்ற நாடகத்தில் கண்ணகி மாதவியைப் புகழ்ந்தமை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

**(15 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk